செ.வெ.எண்: 23/2017 நாள்: 09.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,
பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்,
நலத்திட்ட உதவிகளை இன்று வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (09.01.2017) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் மூலம், காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி வழங்கும் திட்டத்தின் கீழ், வெட்டுர்ணிமடம், அன்பு இல்லம் செவித்திறன் குறைந்தோர் பள்ளியில் பயிலும் மாணவர்கள், தகுதியுள்ள மனுதாரர்கள் உட்பட 52 பயனாளிகளுக்கு தலா ரூ.3,600/- வீதம் மொத்தம் ரூ.1,82,000/- மதிப்பிலான காதொலிக் கருவிகள் மற்றும் விளவங்கோடு வட்டம், மஞ்சாலுமூடு கிராமம் காரோடு அஞ்சல், நாரகத்தன் குழி, கதவு எண் 2/338 என்ற முகவரியில் வசித்து வந்த திரு. விஜயன் என்பவர் மார்த்தாண்டம், சசிராஜ் ஆட்டோ ஓர்க்ஷாப்பில் வேலை செய்து கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே 02.05.2015 அன்று காலமாகி விட்டபடியால், அவரது மனைவி திருமதி. ஷீபாராணி என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவியிலிருந்து ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும் இன்று (09.01.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.